குமுதம்

March 28, 2016 - April 4, 2016

**தமிழரான சிவா அய்யாதுரைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்குமா?**

– தாரா ரமேஷ், முதலியார் பேட்டை.

இ-மெயிலைக் கண்டு பிடித்தது நம் ஊர் சிவா அய்யாதுரை. அதற்கான காப்புரிமையும் அவரிடமே உள்ளது. ஆனால் நியூயார்க்கைச் சேர்ந்த ரேமண்ட் டாம்லின்சன் தான் இ- மெயிலின் தந்தை என்று ஆங்கில இதழ்களில் அவரது இறப்பை ஒட்டி புகழாரம் சூட்டியிருப்பதால் இந்த சர்ச்சை எழுந்துள்ளது. சிவா தமிழர், கருப்பு நிறத்தவர், புலம் பெயர்ந்தவர் என்ற ஏளனம்தான் அதற்கு காரணம். ராஜபாளையத்திற்கு அருகே உள்ள முகவூர் கிராமத்தில் பிறந்த ஒரு தமிழர், உலகம் முழுதும் புகழ் பெறுவதை அவர்கள் வேண்டுமானால் விரும்பாமல் போகலாம். ஆனால், நமக்கு அது தமிழனைத் தலைநிமிர வைத்திருக்கும் செயல். சிவாவுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும் வரை நாம்தான் அவருக்காக குரல் கொடுக்க வேண்டும். இ-மெயிலை பயன்படுத்தும் தமிழர்களே கவனியுங்கள்.



சிவா அய்யாதுரை